2017 ஜுலை 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 189, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

189—

பேருந்து வசதி

***12450—திரு. கே.பி.பி. பாஸ்கர்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் தொகுதி, நாமக்கல்லிலிருந்து சென்னைக்குக் கூடுதலாக குளிர்சாதன சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாமக்கல்லிலிருந்து சென்னைக்கு 2 குளிர்சாதனப் பேருந்துகள் 2 நடைகள்வீதம் அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் மூலமாக இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது. வருங்காலத்தில் இத்தடத்தில் பயணிகள் அடர்வு அதிகரிக்கும்பட்சத்தில் கூடுதலாக குளிர்சாதனப் பேருந்து இயக்குவது குறித்துப் பரிசீலிக்க இயலும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.*

திரு. கே.பி.பி. பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் உறங்கும் திசையை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன். நேற்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்த அரசு அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்க வேண்டும் என்ற மாண்புமிகு*

அம்மா அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றும் வகையில், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் வளாகத்திற்கு சுமார் 14 கோடியே 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியதற்கு நாமக்கல் தொகுதி மக்கள் சார்பாகவும், மாவட்ட மக்கள் சார்பாகவும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) நாமக்கல்லிலிருந்து அதிக அளவில் வியாபாரப் பெருமக்கள், மாணவர்கள் மற்றும் பலதரப்பட்ட மக்கள் சென்னைக்குப் பயணிக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்கள். அதுமட்டுமல்ல, ஏற்கெனவே சேலம், கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் வழியாக சென்னைக்கு இயக்கப்பட்டுவந்த பேருந்து தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நிறுத்தப்பட்ட பேருந்தினை இயக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது என்று கூறியிருக்கின்றார். அந்த வழித் தடத்தை ஆய்வு செய்து, அதனை மீண்டும் இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.

திரு. கே.பி.பி. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.

2017 ஜூலை 12]

திருமதி பொன். சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொன்மனச் செம்மல், ஏழைகளின் இதயக் கனி, பாரத ரத்னா, டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் அகிலத்தில் அழியா புகழ் பெற்றவர்கள். வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் அம்மா என்னும் இதய தெய்வத்தை முதற்கண் வணங்குகின்றேன்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு, தமிழக மக்களுக்குத் தொடர்ந்து எண்ணற்ற பல திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வரும் சேலத்து சிங்கமாம், கொங்கு நாட்டுத் தங்கமாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் ஐயா அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தொகுதியிலுள்ள பக்த பெருமக்கள், திருச்செந்தூர் முருகன் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்வதற்கு ஏதுவாக, திருச்செங்கோட்டிலிருந்து திருச்செந்தூர் செல்வதற்கு பேருந்து ஒன்று இயக்க மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 190, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*